**செய்தி வெளியீடு எண்: 20/2023** **நாள்: 16.02.2023**

**பத்திரிக்கை செய்தி**

**நாட்டுப்புற கலைகளை இன்றைய சந்ததியினர் தெரிந்து கொள்ள வேண்டும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி வேண்டுகோள்**

சென்னை மத்திய சதுக்கத்தில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மற்றும் மார்க் மெட்ரோ சார்பாக மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பயணிகளுக்கு பரிசு பொருள் வழங்கும் நிகழ்ச்சி மற்றும் கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. கிராமியக் கலை நிகழ்ச்சிகளை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதிர்வேதி (இயக்கம் மற்றும் அமைப்பு) முரசு கொட்டி தொடங்கி வைத்தார்.

அப்போது, இன்றைய சந்ததியினர் நாட்டுப்புற கலைகளை தெரிந்திருக்க வேண்டும். அதோடு அக்கலைகளில் எதாவது ஒன்றினை கற்றுக்கொள்ள வேண்டும். அவற்றைப்பற்றி சிறப்பை மக்களிடம் எடுத்து செல்ல வேண்டும் என்று சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதிர்வேதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் ராஜேஷ் சதுர்வேதி மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகளை நகர்ப்புற மக்களும் கண்டுகளிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்கள் மூலம் வருங்கால சந்ததியினர் நாட்டுப்புற கலைகளை அறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நாட்டுப்புற கிராமியக் கலைஞர்கள் தங்களது தனித்துவம் வாய்ந்த பல்வேறு திறமைகளை இந்நிகழ்ச்சி மூலம் மக்களுக்கு தெரிவித்து வருகிறார்கள். இதன் மூலம் கிராமியக் கலை மேலும் வளர்ச்சிப் பெற உறுதிணையாக இருக்கும். இந்நிகழ்ச்சியை கண்டுகளிக்கும் இன்றைய இளைஞர்களுக்கு நாட்டுப்புற கலைகளை பற்றி கற்றுக்கொள்ள வாய்ப்பாக இருக்கும்.

நாட்டுப்புற கலைகளை இன்றைய இளைஞர்கள் கற்க வேண்டும் அதனை வளர்க்க வேண்டும் அதோடு மட்டுமல்லாமல் மேல் நாடுகளுக்கும் சென்று இக்கலையினை வளர்க்க வேண்டும். இந்நிகழ்ச்சியை நடத்திய கலைஞர்கள் பணி புரிபவர்களாகவும், பட்டதாரிகளாகவும் இருக்கிறார்கள். இவர்கள் மேல் நாடுகளுக்கும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார்கள். இவர்களை பாராட்டி மகிழ்ச்சி அடைகின்றேன்.

பத்தாவது மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கலில், மெட்ரோ இரயிலில் ஒரு மாதத்தில் அதிகபட்சமாக பயணம் செய்த முதல் 10 பயணிகள், மாதம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.1500/- மற்றும் அதற்கு மேல் பணம் செலுத்திய 10 பயணிகள் மற்றும் மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டையை வாங்கி அதில் குறைந்தபட்சத் தொகையான ரூ.500/-க்கு டாப் அப் செய்த 10 பயணிகள் என தேர்ந்தெடுக்கப்பட்ட 30 பயணிகளுக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), மார்க் மெட்ரோ இயக்குநர்கள் அனந்த கிருஷ்ணன், முரளி, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் பயணிகளை ஊக்குவிக்கவும், பயனளிக்கவும் சென்னை மெட்ரோ இரயிலில் பயணிகள் தங்களது பயணத்தை தொடர்ந்து பயணிக்கவும் அடுத்த மாதமும் தொடரும். அடுத்த மாதத்திற்கான குலுக்கல் (21.01.2022 – 20.02.2022) 2023 பிப்ரவரி மாதம் இறுதியில் நடத்தப்படும். இந்த பரிசு விவரங்களை மேலும் தெரிந்துகொள்ள அனைத்து மெட்ரோ இரயில் நிலைய கட்டுப்பாட்டாளர்களை அணுகலாம். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் மார்க் மெட்ரோ உடன் இணைந்து இந்த பரிசுகள் வழங்கப்படுகின்றன.

**மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல் - திட்ட விவரங்கள்;**

1. சென்னை மெட்ரோ இரயிலில் ஒரு மாதத்தில் அதிகபட்சமாக பயணம் செய்த முதல் 10 பயணிகள்.
2. **மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல்** - மாதம் ஒரு பரிவர்த்தனைக்கு ரூ.1500/- மற்றும் அதற்கு மேல் பணம் செலுத்திய 10 பயணிகள், மற்றும்
3. **மாதாந்திர அதிர்ஷ்டக் குலுக்கல்** - சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் பயண அட்டையை வாங்கி அதில் குறைந்தபட்சத் தொகையான ரூ.500/-க்கு டாப் அப் செய்த 10 பயணிகள்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**